**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 9/2018</u>**

நாள் 24.02.2026

PW2 – கார்த்திகேயன்

த/பெ – மாரப்பன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தை பொறுத்து சுப்பிரமணியம் என்பவரும், 1–ம் பிரதிவாதியின் தந்தை அய்யாச்சாமி ஆகியோர் சேர்ந்து கடந்த 16.02.1983–ம் தேதியில் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். அந்த சொத்தை அவர்கள் கடந்த 05.02.1996–ம் தேதியில் பதிவு பாகக்கறார் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த சுப்பிரமணியம் என்பவரிடம் இருந்து தான் எனது அப்பா மாரப்பன் தாவா சொத்தை 21.03.1996–ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி பாகபத்திரத்தின்படி பொதுவில் பொதுப்பாதை விடப்பட்டது என்றால் சரிதான். அந்த பொதுப்பாதைக்கு தென்புறத்தில் 1–ம் பிரதிவாதியின் தந்தைக்கும், வடபுறத்தில் எனது சகோதரி மீனாட்சிக்கும் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பொதுப்பாதைக்கு தென்புறத்தில் 1–ம் பிரதிவாதியின் தந்தை பொதுப்பாதையை ஒட்டியவாறு 6,7 வீட்டு மனையிடங்களாக விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனைகளை வாங்கியவர்கள் அதில் வீடுகள் கட்டியுள்ளார்கள். அந்த வீட்டு மனைகளை ஒட்டி மேல்புறத்தில் மீதமுள்ள சொத்துக்களுக்கு செல்ல தென்வடலாக தடம் விட்டுள்ளார் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் தந்தை அய்யாச்சாமி கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே இறந்து

போய்விட்டார். அந்த 6,7 வீடுகளில் 1–ம் பிரதிவாதியின் வீடு கிடையாது என்றால் சரிதான். அந்த பொதுப்பாதையில் எனது அக்கா தான் ஆக்கிரமித்து கம்பிவேலி அமைத்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் வந்து அளவீடு செய்து அது குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. எனது அக்கா மீனாட்சி அவருடைய சொத்தை அவருடைய இரண்டு மகன்களுக்கு எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதனால், தாவா சொத்தில் ஸ்தல அமைப்பு எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது அக்கா கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.24 15:01:22 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**